## வெளிநாடுகளெல்லாம் பாராட்டிப் பின்பற்றும்

# காலை உணவு மாபெரும் வெற்றித் திட்டம்! மாணவர்கள் வாக்காளர்களா?

### பேரவையில் – அ.தி.மு.க. உறுப்பினருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் விளக்க பதில்!

**சென்னை, மார்ச் 19-**

**சட்டப்பேரவையில் அ.தி.மு.க. உறுப்பினர் கே.பி.முனுசாமி பேசும்போது வாக்களிக்கும் உரிமை பெற்றவர்களுக்காக உங்கள் ஆட்சியில் திட்டங்கள் தீட்டப்பட்டு செயல்படுத்தி வருகிறீர்கள் என்று பேசினார்.**

அப்போது முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறுக்கிட்டு பேசியதாவது :

காலை உணவுத் திட்டம் (மேசையைத் தட்டும் ஒலி) அறிவிக்கப்பட்டு, வெற்றிகரமாக, வெளிநாடுகளெல்லாம் கூட பாராட்டி, அதை பின்பற்றலாமா என்று யோசித்துக் கொண்டிருக்கக்கூடிய மாபெரும் திட்டம். அவர்கள் வாக்களிக்கும் உரிமை பெற்றவர்களா? (மேசையைத் தட்டும ஒலி)

வாக்களிப்பதற்காகவா அல்லது வாக்களிக்கத் தவறியவர்களுக்காகவா என்கிற எண்ணத்தோடு திட்டங்கள் தீட்டப்படுகின்றனவா என்று விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நான் ஒன்றைத் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன். என்னுடைய தலைமையில் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி பொறுப்பேற்ற நேரத்தில் முதன்முதலில் பத்திரிகையாளர்களைச் சந்தித்தபோது, 'இந்த ஆட்சியைப் பொறுத்தவரை, வாக்களித்தவர்களுக்கு மட்டுமல்ல; வாக்களிக்காதவர்களுக்கும் சேர்த்துத்தான். (மேசையைத் தட்டும் ஒலி) அதையும் தாண்டி நான் சொன்னேன், வாக்களித்தவர்கள் மகிழ்ச்சியடைய வேண்டும்; வாக்களிக்காதவர்கள், இவர்களுக்கு வாக்களிக்கத் தவறிவிட்டோமே என்று வருத்தப்பட வேண்டும்; அந்தளவிற்கு எங்களுடைய ஆட்சி இருக்கும்' என்பதை நான் தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். அதன்படிதான் இந்த ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. எனவே, இந்த விவாதம் தேவையில்லாத விவாதம்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிக்கிட்டு பேசினார்.

## மதுரை – வாடிப்பட்டி – டி.ஆண்டிப்பட்டியில் – கழிவு நீர்க் குழியில் மூழ்கி உயிரிழந்த

# குழந்தையின் பெற்றோருக்கு ஆறுதல் - நிதியுதவி!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, மார்ச் 19-**

**மதுரை மாவட்டம், வாடிப்பட்டி வட்டம், டி.ஆண்டிப்பட்டி கிராமத்தில் கழிவு நீர்க் குழியில் மூழ்கி உயிரிழந்த குழந்தையின் பெற்றோருக்கு ஆறுதல் தெரிவித்து மற்றும் நிதியுதவி வழங்கி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.**

முதல்வர் அவர்களின் அறிவிப்பு வருமாறு:-

மதுரை மாவட்டம், வாடிப்பட்டி வட்டம், டி.ஆண்டிப்பட்டி கிராமத்தில் வசித்துவரும் சந்தனகருப்பு - திருமதி. கிருஷ்ணவேணி தம்பதியரின் இரண்டு குழந்தைகள் கேசவன் (வயது 4) மற்றும் ரோஷன் ஆகிய இருவரும் கடந்த 15.3.2025 அன்று மாலை 4.00 மணியளவில் வீட்டினருகே விளையாடிக் கொண்டிருந்தபோது எதிர்பாராதவிதமாக அருகிலிருந்த கழிவு நீர்க் குழியில் விழுந்துள்ளனர். இச்சம்பவத்தில் நீரில் தத்தளித்த ரோஷன் அருகில் இருந்தவர்களால் மீட்கப்பட்ட நிலையில் மற்றொரு குழந்தை கேசவன் நீரில் மூழ்கிய நிலையில் மீட்கப்பட்டு சிகிச்சைக்காக மருத்துவனைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்த துயரகரமான செய்தியைக் கேட்டு மிகுந்த வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.

இச்சம்பவத்தில் உயிரிழந்த குழந்தை கேசவனின் பெற்றோருக்கும் அவரது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு, உயிரிழந்த குழந்தையின் பெற்றோருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து மூன்று இலட்சம் ரூபாய் வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

# நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது முதல்வர் உரை...! முதல் பக்கத் தொடர்ச்சி

எங்களைப் பொருத்தவரையிலும், விவாதங்களில் விருப்பு, வெறுப்பின்றி நாகரிகமாக வாதங்களை வைக்க வேண்டும்என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டவர்கள். 23.3.2017 அன்று அன்றைக்கு இந்த அவையில் நான் பேசியதை எண்ணிப் பார்க்கிறேன்.

**நினைத்துப் பார்த்தாலே நெஞ்சம் சுடும் பேச்சு!**

எத்தனை விதிமீறல்கள், மரபுகளிலிருந்து விலகல்கள், என்னுடைய உரையில் அன்றைக்குச் சுட்டிக்காட்டியுள்ளேன். நினைத்துப் பார்த்தாலே நெஞ்சம் சுடுகிறது. அதனை அனைவரும் படித்துப் பார்க்க வேண்டும்.

அதுமாதிரியா இன்றைக்கு நடக்கிறது? என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும். நான் அன்றைக்கு உள்ளபடியே வேதனைப்பட்டேன். அந்த வேதனையின் வெளிப்பாடாகத்தான் அது மீண்டும் தொடரக் கூடாது என்று முடிவெடுத்தேன்.

இந்த அவையில் அதுமாதிரி நிகழ்வுகள், விதிமீறல், ஜனநாயகத்தை புறந்துள்ளும் மரபு மீறல்கள், எதுவும் நிகழக்கூடாது என்பதில் முதலமைச்ச ராக பொறுப்பேற்றவுடன் நான் காட்டிய உறுதி, அப்பாவு அவர்களிடம் பொறுப்பை ஒப்படைக்கச் செய்தது.

அவர்களும் முழுமையாக அதனை உணர்ந்து, பேரவைத் தலைவராக தன்னுடைய பணியை மிகச்சிறப்பாக செய்து வருகிறார். அனைவரையும் ஒரே கண்ணோட்டத்தோடு பார்த்து செயலாற்றுகிறார்.

இந்தத் தீர்மானம் மு.அப்பாவு அவர்களின்மீது சில அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்களால் கொண்டு வரப்பட்டுள்ளது. இதையொட்டி அவர்கள் வைத்த வாதங்களில் உண்மைக்கு மாறான செய்திகள் உள்ள காரணத்தால், அதனை மறுத்து, விளக்கத்தை எடுத்து வைத்து - பேரவைத் தலைவரின் நடுநிலையை பறைசாற்ற வேண்டிய கடப்பாடு, கடமை, பொறுப்பு முதலமைச்சருக்கும் உள்ளது, இங்கே உள்ள அனைத்து உறுப்பினர்களுக்கும் உள்ளது.

அவைக்கு ஒவ்வாத வார்த்தைகளாக அன்றைக்குப் பயன்படுத்தப்பட்ட பல சொற்கள், 'அருகதை', 'தகுதி', 'என்ன யோக்கியதை இருக்கிறது' என்று தி.மு.க. உறுப்பினர்களைப் பார்த்து அன்றைக்குப் பேசப்பட்ட அந்த வார்த்தைகள், இன்றைக்கு அவையில் பேசப்படுமானால், உடனே பேரவைத் தலைவரால் அந்த வார்த்தைகள் நீக்கப்பெற்றுள்ளன.

அன்றைக்கு ஆளுங்கட்சி உறுப்பினர்கள் பேசினால் அவைக்குறிப்பில் இடம் பெறும். தி.மு.க. உறுப்பினர்கள்பேசினால் நீக்கப்படும் என்ற நிலை. இன்றைக்கு பேரவைத் தலைவர் அவர்கள் அப்படியா நடக்கிறார்? இல்லை.

**அ.தி.மு.க. உறுப்பினர்களுக்கு அதிக வாய்ப்பு!**

நம்முடைய பேரவைத் தலைவர் அவர்கள் அ.தி.மு.க. உறுப்பினர்கள் பேசுகிற இதுபோன்ற ஒன்றிரண்டு வார்த்தைகளைக் கூட விட்டுவிடுகிறார். ஆளுங்கட்சி உறுப்பினர்களிடம் கண்டிப்பாக நடந்துகொள்கிறார் என அமைச்சர்கள், உறுப்பினர்கள் சொல்லும்போது, அதைக் கேட்டு உள்ளபடியே எனது மனம் மகிழ்ச்சி அடைந்தது.

ஏனென்றால், எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்குத்தான் அதிக வாய்ப்புகள் தர வேண்டும், அவர்கள் இந்த அரசின் செயல்பாட்டினை செம்மைப்படுத்துபவர்களாக உள்ளவர்கள் என்பதில் தலைவர் கலைஞர் அவர்களின் வழி நடக்கும் திராவிட மாடல் அரசுக்கு அந்த எண்ணம் உண்டு.

பல நேரங்களில் கடந்த காலங்களில் நான் பெற்ற கசப்பான உணர்வு என் நினைவிற்கு வரும். இங்கே, அ.தி.மு.க. உறுப்பினர்கள் கோஷமிட்டுக் கொண்டிருந்தால், தொடர்ந்து குழப்பம் விளைவித்துக் கொண்டிருந்தால் அவர்களை அமைதிப்படுத்தி, அமர வைக்கத்தான் பேரவைத் தலைவர் முயல்வாரே தவிர முந்தைய பேரவைகளில் நாங்கள் வெளியேற்றம் செய்யப்பட்டதைப் போல, என்றும் வெளியேற்றம் செய்ய பேரவைத் தலைவர் நினைத்ததில்லை.

கூட்டணியில் உள்ள எங்கள் கட்சி உறுப்பினர்கள் மானியக் கோரிக்கை மீதான விவாதங்களில் பங்குபெற, முன்பு அளிக்கப்பட்டதுபோல தனியே வாய்ப்பு அளிக்காமல், எங்கள் கணக்கிலேயே பேரவைத் தலைவர் சேர்த்துவிடுகிறார்.

கேட்டால், உதயசூரியன் சின்னத்தில் நின்று வென்றவர்கள் என்ற காரணத்தால் என்பார். அது மாதிரியா முன்னர் நடந்தது? ஒன்றிரண்டு விஷயங்களை இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

கடந்த 10.1.2025 அன்று ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதம் நடைபெற்றது. எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் உரையாற்றினார்கள். 1.40 மணிக்குத் தொடங்கி 4.32 மணிக்குத் தான் முடித்தார். 2 மணி நேரம் 52 நிமிடம் பேசியுள்ளார். அமைச்சர்களின் குறுக்கீடுகள் 1 மணி நேரம். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் மட்டும் பேசியது 1 மணிநேரம் 51 நிமிடம்.

இங்கே எதிர்க்கட்சிகள், குறிப்பாக அதிமுக உறுப்பினர்கள் உரையாற்றுகையில் அமைச்சர்கள் விளக்கம் அளிக்க எழுந்தால், உரையை முடித்த பிறகு விளக்கம் அளிக்கலாம் என அமர வைத்துள்ளார்.

அதேநேரத்தில், எதிர்க்கட்சித் தலைவர் உள்ளிட்ட முன்வரிசைத் தலைவர்கள் எழுந்தால் உடன் அனுமதி அளித்திடுவார். நான் குறையாகச் சொல்லவில்லை, பெருமையாகவே சொல்கிறேன். அமைச்சர்கள் குறுக்கீடும் உறுப்பினர்கள் கணக்கில் ஏற்கெனவே கடந்த காலத்தில் வைக்கப்பட்டுள்ளது. ஆனால் உறுப்பினர் பேசுகிற நேரத்தை மட்டும் கணக்கிட்டு, இங்கே உள்ள ஸ்கீரினிலேயே காண்பிக்கிறார்கள்.

**சுதந்திரக் காற்றை சுவாசிக்கும் பேரவை!**

அனைத்து வகைகளிலும் எங்களைலாக் செய்கிறார் என எங்கள் கட்சி உறுப்பினர்கள் சொன்னாலும் - சுதந்திரக் காற்றை இந்தப்பேரவை தற்போது சுவாசிக்கிற காரணத்தால், பேரவைத் தலைவர் செயல்பாட்டினை எண்ணி மகிழ்ச்சியுற்றுள்ளேன்.

பேரவைத் தலைவராக மட்டுமல்ல, பேரவை கடைப்பிடிக்க வேண்டிய பண்பாட்டின் தலைவராக அப்பாவு அவர்கள் செயல்பட்டுள்ளார் என்றே குறிப்பிட விரும்புகிறேன்.

பல நாட்களில். அ.தி.மு.க. உறுப்பினர்களை பேச அனுமதித்துவிட்டு, தி.மு.க. உறுப்பினர்கள் பேச பெயர் பட்டியலில் இடம் பெற்றும், இன்னொரு நாள் பேசலாம் என்றும் சொல்லி இருக்கிறார்.

பேரவைத் தலைவர் அவர்களின் செயல்பாடுகளை எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வெளிப்படையாக பாராட்ட முடியா விட்டாலும், மனதிற்குள் பாராட்டிக் கொண்டு தான் இருப்பார்கள்.

இந்த அரசின் மீது குற்றம் குறை கூற வாய்ப்பில்லாத காரணத்தால் இப்படி ஒரு தீர்மானமா உள்கட்சிக்குள் ஏற்பட்டுள்ள குழப்பத்தால் அதை திசை திருப்ப இப்படி ஒரு தீர்மானமா என்ற விவாதத்தை வெளியில் உள்ளவர்கள் நடத்தட்டும். நாம் நடத்த வேண்டாம்.

ஆனால் இப்படி ஒருவர் மீது இப்படி ஒரு தீர்மானம் கொண்டு வந்தோமே என்று எதிர்காலத்தில் உங்கள் மனச்சாட்சி உறுத்தும். பேரவைத் தலைவர் அவர்கள் மீது எய்தப்பட்ட அம்பாகவே கருதுகிறோம். இந்த அம்பை இந்த அவை ஏற்காது.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

## தமிழ்நாட்டில் இயங்கி வரும் – ஒன்றிய அரசின் கேந்திரிய வித்யாலயா பள்ளிகளில்

# தமிழ் மொழியை தொடர்ந்து புறக்கணிப்பது ஏன்?

### மக்களவையில் – தயாநிதி மாறன் கேள்வி!



*புதுடெல்லி, மார்ச் 19-*

தமிழ்நாட்டில் செயல்படும் கேந்திரிய வித்யாலயா பள்ளிகளில் உள்ள தமிழ், இந்தி மற்றும் சமஸ்கிருத ஆசிரியர்களின் எண்ணிக்கை எவ்வளவு? ஆசிரியர்கள் நியமனத்தில் சமநிலை உள்ளதா என பல்வேறு கேள்விகளை மக்களவையில் ஒன்றிய கல்வி அமைச்சகத்திடம் தயாநிதி மாறன் எழுப்பினார்.

அதன் விவரங்கள் பின்வருமாறு:-

நாட்டில் தற்போது உள்ள கேந்திரிய வித்யாலயா மற்றும் பிரதம மந்திரி (PM SHRI) பள்ளிகளின் எண்ணிக்கை மற்றும் கடந்த ஐந்து ஆண்டுகளில் இவற்றின் செயல்பாட்டிற்காக ஒதுக்கப்பட்ட நிதி மாநில வாரியாக எவ்வளவு? குறிப்பாக தமிழ்நாட்டில் உள்ள பள்ளிகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதி எவ்வளவு எனக் கேள்வி எழுப்பினார்.

தமிழ்நாட்டில் செயல்படும் PM SHRI மற்றும் கேந்திரிய வித்யாலயா பள்ளிகளில் உள்ள தமிழ், இந்தி, மற்றும் சமஸ்கிருத ஆசிரியர்களின் மொத்த எண்ணிக்கை என்ன? ஒவ்வொரு பள்ளியின் மொழித் துறைகளுக்காக ஒதுக்கப்பட்ட நிதி எவ்வளவு எனக் கேள்வி எழுப்பினார்.

இந்தியாவின் மொழிப் பன்மைத்துவத்தை கருத்தில் கொண்டு, தமிழ்நாட்டில் உள்ள PM SHRI மற்றும் கேந்திரிய வித்யாலயா பள்ளிகளில், மாநில மொழியான தமிழுக்கு முன்னுரிமை அளிக்கும் வகையில் அரசு ஆசிரியர்கள் நியமனத்தில் சமநிலை உள்ளதா எனக் கேள்வி எழுப்பினார்.

இந்தக் கேள்விகளுக்கு ஒன்றிய அரசின் கல்வி அமைச்சகம் அளித்த பதில்கள் மிகவும் அதிர்ச்சியும் வேதனையும் அளிக்கிறது.

**வேதனை தரும் பதில்!**

தமிழ்நாட்டில் உள்ள 45 கேந்திரிய வித்யாலயா பள்ளிகளில், 24 பள்ளிகளில் மட்டுமே ஒப்பந்த அடிப்படையில் தமிழ் ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டு தமிழ்ப் பாடம் கற்பிக்கப்படுகிறது. மீதமுள்ள 21 பள்ளிகளில் தமிழ்ப் பாடங்கள் தமிழ்நாடு அரசின் தன்னாட்சி அமைப்பான Tamil Virtual Academy (TVA) மூலம் கற்பிக்கப்படுகிறது. தமிழ்நாட்டில் PM SHRI கேந்திரிய வித்யாலயா பள்ளிகளில் 69 இந்தி ஆசிரியர்கள், 50 சமஸ்கிருத ஆசிரியர்கள் உள்ளனர். ஆனால் தமிழ் ஆசிரியர்கள் 34 பேர் மட்டுமே பணியாற்றுகின்றனர். இதில் தமிழ் மொழி ஆசிரியர்கள் ஒப்பந்த அடிப்படையில் (contract basis) நியமிக்கப்படுகின்றனர், நிரந்தர மொழி ஆசிரியர் பணியிடங்கள் இந்தி, ஆங்கிலம் மற்றும் சமஸ்கிருதத்திற்கு மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது.

தற்போதைய நிலவரப்படி, நாடு முழுவதும் 1253 கேந்திரிய வித்யாலயாக்கள் செயல்பட்டு வருகின்றன, இதில் தமிழ்நாட்டில் 45 கே.வி. பள்ளிகளும் அடங்கும். இந்திய அரசால் கேந்திரிய வித்யாலயா சங்கத்திற்குக் ஒதுக்கப்படும் நிதிகள், "GrantinAidSalaries", "Grantin AidGeneral", "Grant for Creation of Capital Assets" என்ற தலைப்புகளில் வழங்கப்படுகின்றன. ஆனால், மாநில/ யூனியன் பிரதேசம்/ மாவட்டம்/ தனிப்பட்ட கேந்திரிய வித்யாலயா அளவில் தனியாக வழங்கப்பட்ட நிதியின் தரவுகள் இல்லை.

இந்தப் பள்ளிகளில் முதன்மையாக இந்தி மற்றும் ஆங்கில மொழிகளில் மட்டுமே பாடங்கள் நடத்தப்படுகின்றன. கேந்திரிய வித்யாலயா கல்விக் குறியீட்டின் 112வது பிரிவின்படி, 15 அல்லது அதற்கு மேற்பட்ட மாணவர்கள் விரும்பினால் மட்டுமே உள்ளூர்/ பிராந்திய மொழியில் பாடங்கள் நடத்தப்பட கூடுதல் ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. அப்போது கூட கேந்திரிய வித்யாலயா சங்கத்தின் துணை ஆணையர் அனுமதி பெற்ற பிறகு, ஒரு பகுதி நேர ஒப்பந்த ஆசிரியர் தான் (parttime contractual teacher) நியமிக்கப்படுவார்.

இவ்வாறு ஒன்றிய கல்வி அமைச்சகம் பதிலளித்துள்ளது.

## கழகத் தலைவர் பிறந்தநாள் விழா! தஞ்சை வடக்கு மாவட்ட பொறியாளர் அணி சார்பில்

# கும்பகோணம் அரசு தலைமை மருத்துவமனையில் நலத்திட்ட உதவிகள் !

### அமைச்சர் கோவி.செழியன் வழங்கினார்!

*தஞ்சாவூர் மார்ச்.19.*

கழகத் தலைவர், தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72வது பிறந்தநாளை முன்னிட்டு தஞ்சை வடக்கு மாவட்ட பொறியாளர் அணி சார்பில் கும்பகோணம் அரசு தலைமை மருத்துவமனையில் நலத்திட்ட உதவிகளை அமைச்சர் கோவி.செழியன் வழங்கினார்.

மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் இராஜா. இரகுபதி ஏற்பாட்டில் கும்பகோணம் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் பிறந்த குழந்தைகள் மற்றும் கர்ப்பிணி பெண்களுக்கு நலத்திட்ட உதவிகளை மாநகரச் செயலாளர் சு.ப.தமிழழகன் தலைமையில், மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் ஆர்.வி.எல்.இரவிச்சந்திரன் முன்னிலையில் உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் வழங்கினார்.

அதனை தொடர்ந்து பேசிய அமைச்சர் தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க. பொறியாளர் அணி சார்பில், கழகத் தலைவர், தமிழ்நாடு முதல்வர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு, கும்பகோணம் மாவட்ட அரசு, தலைமை மருத்துவமனையில் பிறந்த குழந்தைகளுக்கு உடை, குழந்தைகளுக்கு தேவையான பொருட்கள் அடங்கிய பை, மற்றும் தாய் மார்களுக்கு ஃபிரட், பிஸ்கட், பழங்கள், இனிப்புகள் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது. மேலும் மருத்துவமனை மருத்துவர்கள் சார்பில் மருத்துவமனைக்கு தேவையான கோரிக்கைகளை வைத்துள்ளனர். அதனை சரிசெய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என கூறினார்.

பின்னர் கும்பகோணம் மிளகு ரெஸ்டாரண்டில் நடைபெற்ற பொறியாளர் அணி நிர்வாகிகள் நேர்காணல் நடைபெற்றது.

இந்நிகழ்வில் ஒன்றியச் செயலாளர்கள் கோ.க.அண்ணாதுரை, இர.உதயசந்திரன், கும்பகோணம் மாநகர தி.மு.க நிர்வாகிகள் எஸ்.வாசுதேவன், ப்ரியம் ஜெ.சசிதரன், எஸ்.இரவிச்சந்திரன், மாவட்ட சார்பு அணி நிர்வாகிகள் டி.ஆர்.அனந்தராமன், எஸ்.முருகன், கே.கே.எஸ்.ராஜா, மாவட்ட துணை அமைப்பாளர்கள் வள்ளி கண்ணன், பிலவேந்திரன், சக்திவேல், குமார், சம்பத், உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து கோவை வடக்கு மாவட்ட தி.மு.க. இளைஞரணி சார்பில் கோவை கவுண்டம்பாளையம் தொகுதிக்கு உட்பட்ட அசோகபுரத்தில் நடைபெற்ற கண்டன பொதுக்கூட்டத்தில் திராவிட இயக்கப் பேச்சாளர் நாஞ்சில் சம்பத், இளம் பேச்சாளர் ஆட்லின், வடக்கு மாவட்ட கழக செயலாளர் தொ.அ.ரவி ஆகியோர் எழுச்சியுரையாற்றினர். வடக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஹக்கிம் தலைமையில் இளைஞரணி துணை அமைப்பாளர்கள் எம். மனோஜ், வே.சூரியன்தம்பி வரவேற்புரையில் விக்னேஸ்வரன் நன்றியுரையில் நடைபெற்ற கண்டன பொதுக்கூட்டத்தில் உதயநிதிபாபு, நாகராஜ், ஒன்றிய செயலாளர் எஸ்.கார்த்திக் நாகராஜ், அருண்குமார், மாவட்ட துணைசெயலாளர் அசோக் ஆறுக்குட்டி, பகுதிசெயலாளர் சரத் உள்ளிட்ட 1500 க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

## கருஞ்சட்டைப் பதிப்பகம் நடத்தும்

# 'பாசிசத்திற்கு எதிரான ஸ்டாலின் குரல்' நூல் வெளியீட்டு விழா!

### சுப.வீரபாண்டியன் தலைமை! அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் நூல் அறிமுக உரை! சே.மெ.மதிவதனி பங்கேற்பு!

*சென்னை, மார்ச் 19-*

கருஞ்சட்டைப் பதிப்பகம் நடத்தும் "பாசிசத்துக்கு எதிரான ஸ்டாலின் குரல்" நூல் வெளியீட்டு விழா சென்னை, அன்பகத்தில் இன்று (19.3.2025 புதன் கிழமை) மாலை 6.00 மணி முதல் 8.30 மணி வரை நடைபெறுகிறது.

'பாசிசத்துக்கு எதிரான ஸ்டாலின் குரல்' எனும் இந் நூல் வெளியீட்டு விழாவுக்கு தோழர்கள் செல்வின் சௌந்தரராஜன், அ.லாரன்ஸ் முன்னிலை வகிக்கிறார்கள்.

தோழர் பெல்.இராசன் வரவேற்புரை நிகழ்த்த இத்லாஸ் உசேன் தொகுப்புரை வழங்குகிறார்.

திராவிட இயக்கத் தமிழர் பேரவைத் தலைவர் சுப. வீரபாண்டியன் அவர்கள் தலைமையில் தகவல் தொழில் நுட்பத் துறை அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் நூல் அறிமுக உரை நிகழ்த்துகிறார். பாசிசத்துக்கு எதிரான அரசியலை தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்ற கழகம் கட்டமைத்தது. அதற்கு ஸ்டாலின் அவர்கள் தலைமை ஏற்று வழி நடத்தினார். பத்தாண்டு காலம் பி.ஜே.பி. ஆட்சியில் என்ன செய்தோம் என்று சொல்வதை விட்டுவிட்டு, வெறும் வெறுப்பு பேச்சை மட்டுமே ஆயுதமாக்கி பாசிசக் கூட்டம் 2024இல் தேர்தல் பிரச்சாரத்தை முன்னெடுத்தது.

பாசிசம் ஒவ்வொரு பகுதிக்கும் ஏற்றது போல் தனது உத்தியை மாற்றிக் கொள்ளும் என்ற கருத்தை உறுதி செய்வதுபோல் 2024 தேர்தலில் பிஜேபியின் பிரச்சாரம் அமைந்தது.

பாசிசத்தை வீழ்த்தி மக்களாட்சியை நிலைநாட்ட 2024ஆம் ஆண்டு தேர்தலில் தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் முன்னெடுத்த பிரச்சாரத்தின் போது ஆற்றிய உரைகளின் தொகுப்பே இந்த நூல். அடுக்கடுக்கான வாதங்களும், ஆழமான பல விளக்கங்களும் இந்நூலில் கொட்டிக் கிடக்கின்றன.

திராவிடர் கழகத் துணைப் பொதுச் செயலாளர் தோழர் மதிவதனி பங்கேற்கும் இந்நிகழ்ச்சியில் தோழர் சாரதா தேவி நன்றி உரையாற்றுகிறார்.

## பேரவையில் - இருதய அறுவை சிகிச்சை நிபுணர்

# கே.எம்.செரியன் மறைவுக்கு இரங்கல் தீர்மானம்!

*சென்னை, மார்ச் 19-*

சட்டப்பேரவை நேற்று முன்தினம் காலை கூடியதும் மறைந்த முன்னாள் உறுப்பினர்கள் பி.ஆர்.சுந்தரம், மா.கோவிந்தராஜுலு, வே.குணசீலன் ஆகியோர் மறைவுக்கு இரங்கல் குறிப்பு வாசிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து மறைந்த பிரபல இருதய அறுவை சிகிச்சை நிபுணர் மருத்துவர் கே.எம். செரியன் மறைவுக்கு இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு மணித்துளிகள் எழுந்து நின்று அமைதி காத்தனர்.

# ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதானின் தந்தை மறைவு!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

**சென்னை, மார்ச் 19-**

ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் அவர்களின் தந்தை தேபேந்திர பிரதான் அவர்களின் மறைவுக்கு - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சமூக வலைதளப் பதிவில் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தி வருமாறு:

முன்னாள் ஒன்றிய அமைச்சரும், ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் அவர்களின் தந்தையுமான தேபேந்திர பிரதான் அவர்களின் மறைவு செய்தி கேட்டு மிகவும் வருத்தமடைந்தேன்.

தர்மேந்திர பிரதான் அவர்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த கடினமான காலத்தை கடக்க அவருக்கு வலிமை கிடைக்கட்டும்.

இவ்வாறு முதல்வர் அவர்கள், தமது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.